செ.வெ.எண்: 584 நாள்: 11.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற**
**மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்**
**17 பயனாளிகளுக்கு ரூ.3.63 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.10.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பட்டா மாறுதல், விலையில்லா வீட்டுமனைப் பட்டா, வங்கிக்கடன் உதவி, பசுமைவீடு, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 418 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அளித்தனர். இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

முன்னதாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ.2.63 லட்சம் மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் மூலமாக இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிதியுதவித் தொகைக்கான காசோலைகளும், ஒருவருக்கு மடக்கு சக்கர நாற்காலியும் மற்றும் குளத்தூர் தாலுகா, மேலப்புதுவயல் கிராமத்தை சேர்ந்த நாகராஜன் என்பவர் சாலை விபத்தில் இறந்ததைத் தொடர்ந்து, வாரிசுதாரரான அவரது தந்தை சுப்பிரமணியன் என்பவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின்கீழ், ரூ.1 லட்சம் நிவாரண உதவித்தொகைக்கான காசோலையினையும் நலத்திட்ட உதவிகளாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) கிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**